JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

Crl.M.P. No.1876/2025 Date:19.01.2026

| | |
|---|---|
| பெயர் | Mohammed Arif Zain |
| தந்தை பெயர், க/பெ | Zain Ulabideen |
| முகவரி | Flat No.2, VGN Apartmensts, Nolambur Road, Maduravoyal, Mogappair West, Chennai. |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | கட்டுமான நிறுவனர் |
| மதம் | |
| வயது | 37/2026 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 19th day of January 2026.

**சத்தியபிரமாண வாக்குமூலம்**

நான் இந்த வழக்கின் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பில் முதலாவது சாட்சி ஆவேன். சுலேகான் பர்வின் என்பவர் எனது மனைவியாவார். அருண்குமார் என்பவர் எனது நண்பர் ஆவார். இவர்கள் இருவர் மூலமாக இளையராஜா, அசோக்குமார், துரைராஜ் மற்றும் முகமது ஜலில் இவர்கள் அனைவரும் எனக்கு அறிமுகமானார்கள். இவர்களை என் நிறுவனத்தில் சேர்த்துக்கொள்ளுமாறு எனது மனைவியும், என் நண்பர் அருண்குமாரும் பரிந்துரைத்தனர். இந்நிலையில் 26.07.2024 அன்று சுலேகான் பர்வினின் உறவினர் மூலமாக இவர்கள் அனைவரும் திருமண மோசடி, வேலை வாய்ப்பு மோசடி மற்றும் திருட்டு வழக்குகளில் ஈடுபட்டுள்ளது எனக்கு தெரியவந்தது. அதனால் அவர்கள் அனைவரிடமிருந்தும் தொடர்பை தவிர்த்து வந்தேன். இந்நிலையில் போலி ஆவணம் தயாரித்து அதன் பெயரில் கடன் வாங்கி தருமாறு என்னை நிர்பந்தித்தார்கள். நான் முடியாது என்று கூறிய நிலையில் என்னுடைய வாடிக்கையாளர்களிடம் இவனுக்கு கட்டிட ஒப்பந்தம் கொடுக்காதீர்கள் என்றும், மேலும், எனது உறவினர்களிடம் இவன் ஆண் இல்லை என்றும், என்னை அசிங்கப்படுத்தும்படி பேசினார்கள். இதனால் நான் தொழில் வாய்ப்புகள் இழந்தும், எனது உறவினர்கள் முன்னிலையில் அவமானப்பட்டு நிர்கின்றேன். இவர்கள் அனைவரும் என்னை பற்றி தவறாக பேசியதற்கு அவர்களுக்கு தக்க தண்டணை அளிக்குமாறம், அவர்களால் நான் இழந்த தொழில் நட்டத்திற்கு ஈடுசெய்ய வேண்டும் என்றும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur